

**தலைவர் ஹென்றி பி.ஐரிங்**
பிரதான தலைமையின்
முதல் ஆலோசகர்

# நாம் நேசிப்பவர்களுக்கான சந்தோஷம்

நாம் நேசிக்கிறவர்கள் எல்லோரும் சந்தோஷமாயிருக்கவேண்டுமென்றும் முடிந்தவரை அவர்களுக்கு சிறிதே வேதனையிருக்கவேண்டுமென்றும் நாம் விரும்புகிறோம். மார்மன் புத்தகத்தில் சந்தோஷத்தின், வேதனையின் விவரங்களை நாம் படிக்கும்போது நாம் நேசிக்கிறவர்களைப்பற்றி நாம் நினைக்குமபோது நமது இருதயங்கள் கலங்குகிறது. சந்தோஷத்தின் ஒரு நேரத்தைப்பற்றி இங்கே ஒரு உண்மை விவரம்:

“ஜனங்களுடைய இருதயங்களில் வாசமாயிருந்த தேவ அன்பினிமித்தம் தேசத்தில் எந்த பிணக்கும் இல்லாமலிருந்தது.

“அங்கு பொறாமைகளோ, பிணக்குகளோ, குழப்பங்களோ, வேசித்தனங்களோ, பொய்யுரைகளோ, கொலைகளோ, எந்த விதமான காமவிகாரமோ இருக்கவில்லை. தேவ கரத்தால் சிருஷ்டிக்கப்பட்ட ஜனங்கள் எல்லாருக்குள்ளும் இவர்களைக் காட்டிலும் மிகுந்த மகிழ்ச்சியான ஜனம் நிச்சயமாய் இருந்திருக்க முடியாது.”

பின்னர் நாம் படிக்கிறோம்:

“அவர்கள் எவ்வளவு பாக்கியவான்கள்! ஏனெனில் கர்த்தர் அவர்களை அவர்களுடைய எல்லா நடவடிக்கைகளிலும் ஆசீர்வதித்தார்; ஆம், நூற்றிப்பத்து வருஷங்கள் கடந்துபோகுமட்டும் அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டு விருத்தியடைந்தார்கள்; கிறிஸ்து தொடங்கி முதல் தலைமுறை கடந்துபோயிற்று. தேசம் முழுவதிலும் எந்தப் பிணக்குமில்லை (4நேபி 1:15-16, 18).

கிறிஸ்துவின் நேசமுள்ள சீஷர்கள் மற்றவர்களுக்காகவும் அவர்களுக்காகவும் அத்தகைய ஒரு ஆசீர்வாதத்திற்காக ஜெபித்து செயல்பட்டார்கள். மார்மன் புத்தகத்திலுள்ள விவரங்களிலிருந்தும் நம்மில் அநேகருக்கு நமது சொந்த அனுபவங்களிலிருந்தும் சந்தோஷத்தின் வரம் அடையக்கூடியதென்பதை நாம் அறிந்துகொள்கிறோம். சந்தோஷத்தின் பாதை நன்றாக வகுக்கப்பட்டிருக்கிறதென நாம் அறிகிறோம். “தேவ அன்பு” நமது இருதயங்களில் வாசம் செய்கிறதென்பது இரட்சகரின் சந்திப்பிற்குப் பின்னர் நேபியர்களுக்குள்ளிருந்ததைப் போலிருக்கும்வரை சந்தோஷத்தை தக்கவைத்துக் கொள்வது எளிதல்ல.

அதை சாத்தியமாக்கிய பிரமாணத்தை அவர்கள் கைக்கொண்டதால் அந்த அன்பு நேபியர்களின் இருதயங்களிலிருந்தது. நமது பரலோக பிதாவிடம் ஒரு இருதயப்பூர்வமான வேண்டுதலுடன் ஆரம்பமாகும் திருவிருந்து ஜெபத்தில் அந்த பிரமாணத்தின் ஒரு தொகுப்பு காணப்படுகிறது. ஒரு முழுஇருதய விசுவாசத்துடனும் நமது சொந்த இரட்சகரிடம் ஒரு ஆழமான அன்புடனும் நாம் ஜெபிக்கிறோம். அவருடைய நாமத்தை நம்மீது எடுத்துக்கொள்ளும் ஒரு உண்மையான எண்ணத்துடனும் அவரை நினைவுகூரவும், அவருடைய கட்டளைகள்

எல்லாவற்றையும் கைக்கொள்ளவும் நாம் பொறுப் பேற்கிறோம். இறுதியாக, தெய்வத்துவத்தின் மூன்றாவது அங்கத்தினரான பரிசுத்த ஆவியானவர் பிதாவையும் அவருடைய நேசக் குமாரனையும் நமது இருதயங்களில் சாட்சியளித்து எப்போதுமே நம்முடனிருப்பார் என்று நாம் விசுவாசத்தை வைக்கிறோம். (கோ.உ 20:77, 79 பார்க்கவும்)

நமது பரலோக பிதா மற்றும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பு நமக்கு வேண்டும் மற்றும் நாம் அதை வரவேற்கும்படியாக பரிசுத்த ஆவியானவரின் துணை யுடன் நமது இருதயங்கள் மாறும். நமது இருதயங்களில் அந்த அன்பின் உணர்வை இழப்பதன் வழியைப் போன்று, நமது இருதயங்களில் தேவ அன்பைப் பெறும் வழி எளிது. உதாரணமாக, ஒருவர் பரலோக பிதாவிடம் அடிக்கடி இல்லாமல் குறைவாக ஜெபிக்க, அல்லது முழு தசமபாகத்தைச் செலுத்தாமலிருக்க அல்லது தேவ வார்த்தையில் உண்டுகளிக்க அல்லது வறியோரையும் எளியோரையும் அசட்டைசெய்ய தீர்மானிக்கலாம்.

கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொள்ளாமலிருக்க எந்த தீர்மானமும் நமது இருதயங்களிலிருந்து பரிசுத்த ஆவி திரும்ப எடுத்துக்கொள்ளப்பட காரணமாயிருக்கும். அந்த இழப்புடன் சந்தோஷம் மங்குகிறது.

நாம் நேசிக்கிறவர்களுக்காக நாம் விரும்புகிற சந் தோஷம் அவர்களுடைய தீர்மானங்களின்படியே. ஒரு பிள்ளையை, ஒரு விசாரிப்பவரை, அல்லது நமது நண் பர்களை நாம் எவ்வளவாய் நேசிக்கிறோமோ அவ்வள வாய் பரிசுத்த ஆவியானவர் தொட்டு அவர்களுடைய இருதயங்களை மாற்றுவதற்காக அவர்கள் தகுதியுள்ள வர்களாகும்படி கட்டளைகளைக் கைக்கொள்ள நாம் அவர்களைக் கட்டாயப்படுத்த முடியாது.

ஆகவே, நாம் நேசிக்கிறவர்களை எது நடத்தினாலும் அவர்களின் சொந்த தீர்மானங்களை கண்காணிக்க உத வுவதே நாம் கொடுக்கக்கூடிய சிறந்த உதவி. நீங்கள் கொடுக்கக்கூடிய ஒரு அழைப்புடன் ஆல்மா அதைச் செய்தான்:

“கர்த்தருடைய சமுகத்தில் உங்களையே தாழ்த்தும்ப டிக்கும், அவருடைய பரிசுத்த நாமத்தை தொழுது, உங் கள் திராணிக்கு அதிகமாய் நீங்கள் சோதிக்கப்படக்கூ டாதபடிக்கு, விழித்திருந்து இடைவிடாமல் ஜெபித்து பரிசுத்த ஆவியாலே வழிநடத்தப்பட்டு, இப்படியாய் தாழ்மையாயும், சாந்தமாயும், கீழ்ப்படிதலாயும், பொறுமையாயும், அன்பிலே நிறைந்து, நீடிய சாந்தமா யிருங்கள்;

கர்த்தர்மேல் விசுவாசம் வைத்து, நித்திய ஜீவனைப் பெறுவீர்கள் என்ற நம்பிக்கையைக்கொண்டு, கடைசி காலத்தில் உயர்த்தப்பட்டு, அவருடைய இளைப்பாறு தலினுள்ளே பிரவேசிக்கும்படிக்கு, உங்கள் இருதயங்க ளில் தேவ அன்பு நித்தமும் நிலைத்திருக்கவேண்டு மென்று நான் விரும்புகிறேன்” (ஆல்மா 13:28-29).

நிலைத்திருக்கும் பாதையைத் தேர்ந்தெடுக்க ஒரு உணர்த்துதலான அழைப்பை நீங்கள் நேசிக்கிறவர்கள் ஏற்றுக்கொள்ள நான் ஜெபிக்கிறேன்.

---

**இந்த செய்தியிலிருந்து போதனை**

வாழ்க்கையில் நாம் உணரக்கூடிய சந்தோஷம் நாம் எடுக்கக்கூடிய தீர்மானங்களின்படியே என தலைவர் ஐரிங் போதிக்கிறார். இந்த செய்தியை நீங்கள் கலந்து ரையாடும்போது, சந்தோஷத்தின் அந்த பாதைக்கு நம்மை நடத்த நாம் செய்வதற்கான தீர்மானத்தை (ஜெபித்தல், செயல்படுதல், விசுவாசத்தைக் கொண்டி ருத்தல் மற்றும் உண்மையான எண்ணத்துடன் நம்மையே ஒப்படைத்தல் போன்ற) நாம் எடுக்கலாமென தலைவர் ஐரிங் குறிப்பிட்ட காரியங்களில் கவனம் செலுத்த கருத்தில் கொள்ளவும். “நிலைத்திருக்கும் சந்தோஷத்தின் பாதைக்கு” அவர்களை சிறப்பாய் நடத்தக்கூடிய இரண்டு மூன்று நடவடிக்கைகளை எழுதும்படி நீங்கள் கற்றுக்கொடுப்பவர்களை நீங்கள் அழைக்கலாம்

## வாலிபர்

### சந்தோஷத்திற்கு நடத்தக்கூடிய நடவடிக்கைகள்

“நாம் நேசிக்கிறவர்களுக்காக நாம் விரும்புகிற சந்தோஷம் அவர்களுடைய தீர்மானங்க ளின்படியே” என தலைவர் ஐரிங் போதிக்கிறார்.

நேபி, லாமான் மற்றும் லெமுவேலின் எடுத்துக்காட் டுக்களிலிருந்து அந்த தீர்மானங்களின் விளைவுகளைப் பற்றி நீங்கள் வாசிக்கலாம். லாமானும் லெமுவேலும் முறுமுறுத்து கட்டளைகளைக் கைக்கொள்ள விரும்ப வில்லை (1நேபி 2:12 பார்க்கவும்). அதன் விளைவாக அவர்களும் அவர்களுடைய சந்ததியரும் சபிக்கப்பட்டு கர்த்தரின் பிரசன்னத்திலிருந்து அறுப்புண்டு போனார்கள் (2நேபி 5:20-24). கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய நேபி தீர்மானித்தான் (1நேபி 3:7 பார்க்கவும்), அதனால் அவ னும் அவனுடைய ஜனங்களும் “சந்தோஷமாய் வாழ்ந்து வந்தார்கள்” (2நேபி 5:27).

நீதியாயிருந்து சந்தோஷமாயிருக்க நீங்கள் தீர்மா னிக்கலாம். ஆனால் உங்களைச் சுற்றியிருப்பவர்கள் ஒருவேளை துன்பத்திற்கு அல்லது வருத்தப்படுவதற்கு

நடத்துகிற மோசமான தீர்மானங்களை இன்னமும் எடுக்கலாம். அவர்களுடைய தீர்மானங்கள் அவர்களுடையதாயிருக்கும்போது, உங்களுடைய எடுத்துக்காட்டு நன்மைக்காக அவர்களுடைய தீர்மானங்களுக்கு ஊக்குவிக்கலாம். உங்களுடைய தீர்மானங்கள் எவ்வாறு மற்றவர்களுக்கு சந்தோஷத்தைக் கொண்டுவரும்? உங்களைச் சுற்றியிருப்பவர்களை செல்வாக்கடையச்செய்து, சந்தோஷமாயிருக்க அவர்களுக்கு உதவுகிற வெவ்வேறு வழிகளைப்பற்றி உங்கள் குடும்பத்தினருடன் கலந்துரையாடுங்கள்.

## பிள்ளைகள்

### அன்பிற்கான சவால்

அமெரிக்காவில் இயேசு ஜனங்களைச் சந்தித்தபோது, ஒருவரிலொருவர் அன்புகூரவும் இரக்கமாயிருக்கவும் அவர்களுக்கு அவர் போதித்தார். இயேசுவைப் பின்பற்றவும் மற்றவர்களிடத்தில் அன்புகூரவும் நீங்கள் என்ன செய்யலாம்? இங்கே சில குறிப்புகளிருக்கின்றன. நீங்கள் மேலே போகும்போது ஒவ்வொரு சவாலும் முடிந்ததாக குறித்துக்கொள்ளுங்கள்.

- ❑ துக்கமாயிருக்கிற ஒருவரை நான் கட்டி அணைக்கலாம்
- ❑ அவர்களே அறியாதிருக்கிற ஒருவருக்கு நான் சேவை செய்யலாம்.
- ❑ அன்பாயிருத்தலைப்பற்றிய ஒரு மாநாட்டு சொற்பொழிவை நான் படிக்கலாம் அல்லது கவனிக்கலாம்.
- ❑ எனது குடும்பத்திற்காக ஒரு ஆரம்ப வகுப்பு பாடலை நான் பாடலாம்.
- ❑ தனிமையிலிருப்பதாகத் தோன்றுகிற ஒருவரைப் பார்த்து நான் புன்னகைக்கலாம்.
- ❑ நான் செய்யலாம். ______________________________.
- ❑ நான் செய்யலாம்.______________________________.

© 2016 by Intellectual Reserve, Inc. *எல்லா உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அ.ஐ.நாவில் அச்சிடப்பட்டது. ஆங்கில அங்கீகாரம்: 6/15. மொழிபெயர்ப்பு அங்கீகாரம்: 6/15. First Presidency Message, January 2016 மொழிபெயர்ப்பு.* Tamil. 12861 418

# குடும்பம்: உலகிற்கு ஓர் பிரகடனம்

*இந்த உரையை ஜெபத்துடன் படித்து எதைப் பகிர்ந்துகொள்வதென்பதை அறிந்துகொள்ள நாடுங்கள். விசாரிப்புப் போதகத்தின் மூலமாக நீங்கள் கண்காணிப்பவர்களை, குடும்பத்திற்கான கோட்பாட்டைப் புரிந்துகொள்ளுதல் எவ்வாறு ஆசீர்வதிக்கும்? அதிகத் தகவலுக்கு* reliefsociety.lds.org *போகவும்.*

**விசுவாசம், குடும்பம், ஒத்தாசை**

1995ன் பொது ஒத்தாசைச் சங்கக் கூட்டத்தில் தலைவர் கார்டன் பி.ஹிங்கிலி (1910-2008) “குடும்பம்: உலகிற்கு ஓர் பிரகடனத்தை” வாசித்தபோது இளம் பெண்கள் பொதுத் தலைவர் போனி எல். ஆஸ்கர்சன் சொன்னார்: “இந்த வெளிப்பாட்டின் ஆவணத்தின் தெளிவு, எளிமை மற்றும் சத்தியத்தை நாம் மதித்து அவற்றிற்காக நாம் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். . . . குடும்பத்தைப்பற்றிய பிரகடனம் உலகத்தின் தத்துவங்களை தீர்மானிக்கிற நமது குறியீடுகளாக மாறுகிறது மற்றும் கொள்கைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என நான் சாட்சியளிக்கிறேன். . . . 20 ஆண்டுகளுக்கு முன்பு தேவனின் ஒரு தீர்க்கதரிசியால் அவை கொடுக்கப்பட்டபோது அவைகள் அன்றிருந்ததைப்போலவே இன்றைக்கும் சத்தியமாயிருக்கின்றன.”[1]

‘அநித்தியத்திற்கு முந்தைய இராஜ்ஜியத்தில் ஆவிக் குமாரர்களும் குமாரத்திகளும் தங்களின் நித்திய பிதாவாக தேவனை அறிந்துகொண்டு அவரைத் தொழுதார்கள்’[2] என “குடும்ப பிரகடனத்திலிருந்து நாம் கற்றுக்கொள்கிறோம்” என ஒத்தாசைச் சங்கத்தின் முதல் ஆலோசகரான கரோல் எம். ஸ்டீபன்ஸ் சொல்கிறார்.

“. . . . நாம் ஒவ்வொருவரும் தேவனின் குடும்பத்திற்கு சொந்த மானவர்களாகி அதற்கு தேவையானவர்களாயிருக்கிறோம்.”[3]

பெற்றோர் தங்கள் வீடுகளையும் தங்களின் குடும்பங்களையும் பாதுகாக்கவேண்டுமென்றிருக்கிற ஒரு நேரத்தில் நாம் வாழ்கிறோம். “குடும்பம்: உலகிற்கு ஓர் பிரகடனம்” நம்மை வழிநடத்துகிறது.

### கூடுதல் வேதவசனங்கள்

மோசியா 8:16-17; கோட்பாடும் உடன்படிக்கைகளும் 1:38

### ஜீவிக்கிற கதைகள்

“விசுவாசம், பொறுமை மற்றும் அன்பு போன்ற தெய்வீக தன்மைகளை விருத்திசெய்ய குடும்ப உறவுகள் உதவுகிறதென பிரகடனம் கற்றுக்கொடுத்தன என டோ யுவான் தைவான் பிணையத்தின் டோ யுவானின் மூன்றாவது தொகுதியிலிருந்து லீ மிய் சென் ஹோ சொன்னார். ‘பிரகடனத்தின்படி நான் என்னை முன்னேற்ற முயற்சித்தபோது நான் உண்மையான சந்தோஷத்தை அனுபவிக்க முடிகிறதென’ அவர் சொன்னார்.”[4]

முதல் முறையாக பிரகடனம் வாசிக்கப்பட்டபோது அங்கிருந்த, பின்னர் ஒத்தாசை சங்கத்தின் பொதுத் தலைமையில் ஒரு ஆலோசகராக பணியாற்றிய பார்பரா தாம்சன் சொன்னார்: “நான் திருமணம் செய்யாமலிருந்து பிள்ளைகள் யாருமில்லாதிருந்ததால் உண்மையில் குடும்ப பிரகடனம் எனக்கு அதிகமாக சம்பந்தமில்லாததென ஒரு கணநேரம் நான் நினைத்தேன். ஆனால் ஏறக்குறைய மிகவிரைவில் நான் நினைத்தேன், ‘ஆனால் அது எனக்கு சம்பந்தப்பட்டது. நான் ஒரு குடும்பத்தின் அங்கத்தினர். நான் ஒரு குமாரத்தி, ஒரு சகோதரி, ஒரு அத்தை, ஒரு மருமகள், ஒரு பேத்தி. . . . நான் என் குடும்பத்தில் ஜீவிக்கிற ஒரே அங்கத்தினராயிருந்தாலும்கூட நான் இன்னமும் தேவ குடும்பத்தின் ஒரு அங்கத்தினராயிருக்கிறேன்.’ ”[5]

**குறிப்புகள்**

1. Bonnie L. Oscarson, “Defenders of the Family Proclamation,” *Liahona,* May 2015, 14–15.
2. “குடும்பம்: உலகிற்கு ஓர் பிரகடனம்.” *லியஹோனா, நவம்பர் 2010. 129*
3. Carole M. Stephens, “The Family Is of God,” *Liahona,* May 2015, 11.
4. Nicole Seymour, “‘The Family: A Proclamation to the World’ reaches 10-Year Milestone, *Liahona,* Nov. 2005, 127.
5. Barbara Thompson, in *Daughters in My Kingdom: The History and Work of Relief Society* (2011), 148.

### இதைக் கருத்தில் கொள்ளவும்

**“குடும்பம்: உலகிற்கு ஓர் பிரகடனம்” எவ்வாறு நமது காலத்திற்கு ஒரு ஆவணமாயிருக்கிறது?**

© 2016 by Intellectual Reserve, Inc. எல்லா உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அ.ஐ.நாவில் அச்சிடப்பட்டது. ஆங்கில அங்கீகாரம்: 6/15. மொழிபெயர்ப்பு அங்கீகாரம்: 6/15. *Visiting Teaching Message, January 2016* மொழிபெயர்ப்பு. Tamil. 12861 418